Deposition of Witness for : PW-2 | Date : 03/10/2023

Case No. : O.S. 469/2019 | Nationality : Indian

Name : சங்கர், உதவி பொறியாளர், எஸ்.புதூர் பாசன பிரிவு, நீர்வளத்துறை | Religion :

Age :45

Father's/Husband's Name :

Village :

Taluk :

<u>வா.சா.2</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் எத்தனை வருடங்களாக எஸ்.புதூர் பாசன பிரிவில் பணியாற்றி வருகிறேன் என்றால் 01/06/2020 முதல் பணியாற்றி வருகிறேன். என்னுடைய பணி என்னவென்றால் ஆறுகள், வாய்க்கால்கள் மற்றும் அதனை சார்ந்த கரைகள் ஆகியவற்றை பராமரிப்பு செய்வது. தாவா சொத்தினை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எப்போது பார்த்தேன் என்றால் கடந்த 6 மாதங்களுக்கு முன்பாக பார்த்தேன்.

2. வெள்ளக்கரை என்னுடைய பராமரிப்பில் உள்ளது என்றால் சரிதான். வெள்ளக்கரை என்ன பயன்பாட்டிற்காக என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் ஆற்றின் கரைகளை பாதுகாப்பதற்காக செல்லும் வழியாக ஒப்படைக்கப்பட்டது. வெள்ளக்கரை தற்போது பாதையாக பயன்பாட்டில் இல்லை என்றால் சரியல்ல. உள்ளது. எஸ்.புதூரில் ஊராட்சி மன்ற அலுவலகம் வெள்ளக்கரையில் கட்டப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. நான் வெள்ளக்கரையை பார்வையிடவில்லை என்றால் சரியல்ல. நிலஅளவை செய்தால் தான் ஊராட்சி மன்ற அலுவலகம் வெள்ளக்கரையில் உள்ளதா என்று தெரிய வரும். வெள்ளக்கரையில் உள்ள ஆறு என்ன ஆறு என்றால் நாட்டாறு ஆகும்.

3. நாட்டாறுக்கு இருபுறமும் உள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான

நிலங்களை நாங்கள் தற்போது வரை நிலஅளவீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் தற்போது அங்குள்ள மரங்கள் மற்றும் கட்டுமானங்கள் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான சொத்தில் உள்ளதா அல்லது பட்டா நிலத்தில் உள்ளதா என்பது எனக்கு தெரியாது என்றால் நில அளவை செய்தால் மட்டுமே தெரியவரும். அவ்வாறு நாங்கள் தற்போது வரை நிலஅளவை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.218/9, 218/7 மற்றும் 193/2 ஆகியவை பட்டா நிலமா அல்லது பொதுப்பணித்துறைக்கு சொந்தமான நிலமா என்பது எனக்கு தெரியாது என்றால் என்னுடைய முன்னிலையில் நிள அளவீடு செய்யவில்லை என்பதால் எனக்கு தெரியாது. யார் முன்னிலையில் சர்வே செய்யப்பட்டது என்றால் எனக்கு முன்னால் பணியில் இருந்து உதவி பொறியாளர் முன்னிலையில் நிளஅளவீடு செய்திருப்பார்கள்.

4. அவ்வாறு நிலஅளவீடு செய்யப்பட்டதற்கு சம்மந்தமாக எனது அலுவலகத்தில் கோப்புகள் உள்ளது என்றால் இல்லை. சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களில் உள்ள விவரங்கள் அனைத்தும் சரிதான் என்றால் சரிதான். பொதுப்பணித்துறைக்கு சொந்தமான நிலத்தில் உள்ள பலன்தரும் மரங்கள் குறித்து எங்களிடம் பதிவேடு உள்ளது என்றால் உள்ளது. குறிப்பாக தென்னைமரங்கள் சம்மந்தப்பட்ட பதிவேடுகள் உள்ளது என்றால் சரிதான்.

5. அவ்வாறு பலன் தரும் மரங்களில் எங்கள் துறை மூலமாக மரங்களுக்கு எண்ணிடப்பட்டு ஏலம் விடப்படும் என்றாலும், அதற்கான பதிவேடு உள்ளது என்றாலும் சரிதான். அலுவலகத்தில் பதிவேடு உள்ளதா என்று பார்க்க வேண்டும். பிரதிவாதி சுரேஷ் வீடு இருக்கும் இடத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. அதில் எத்தனை தென்னை மரங்கள் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வெட்டப்பட்ட தென்னை மரம் இருந்த இடமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவ்வாறான

தென்னை மரங்கள் பட்டா நிலத்தில் உள்ளதா அல்லது பொதுப்பணித்துறைக்கு சொந்தமான நிலத்தில் உள்ளதா என்று எனக்கு தெரியுமா என்றால் பதிவேடுகளை பார்த்து தான் சொல்ல முடியும். பதிவேடுகள் எங்கள் அலுவலகத்தில் உள்ளது என்றால் சரிதான்.

6. அந்த பதிவேடுகளை பார்த்தால் ஆற்றிற்கு தென்கரை மற்றும் வடகரையில் எவ்வளவு மரங்கள் உள்ளது , அந்த மரங்களை யார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதி சுரேஷ் தென்னை மரங்களை அனுபவம் செய்து வந்து அதற்கான குத்தகையை பொதுப்பணித்துறைக்கு செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. தற்போது வரை செலுத்தவில்லை. எதன் அடிப்படையில் குத்தகை செலுத்தவில்லை என்று கூறுகிறேன் என்றால் பிரதிவாதி தற்போது வரை நேரடியாக எங்கள் அலுவத்திற்கு வந்து தென்னை மரத்திற்கு குத்தகை செலுத்தியதில்லை. பிரதிவாதி அவ்வாறு குத்தகை செலுத்தி ரசீது வைத்திருந்தால் அந்த ரசீது செல்லுபடியாகும் என்றால் சரிதான்.

7. வெள்ளக்கரை மற்றும் அதன் படுகை எங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி என்றாலும், எங்களுக்கு சொந்தமான பகுதி என்றாலும் சரிதான். அதனை விற்கவோ, வாங்கவோ முடியாது என்றால் சரிதான். அந்த பகுதியை விற்பனை செய்திருந்தாலோ, வாங்கியிருந்தாலோ அந்த ஆவணங்கள் செல்லக்கூடியதில்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.1 உத்தரவு என்ன உத்தரவு என்றால் கும்பகோணம் சார்ஆட்சியரால் தென்னை மரம் ஏலம் விடப்பட்டதற்கான உத்தரவு ஆகும். வெள்ளரை பகுதி எங்கள் அலுவலகத்திற்கான அதிகார வரம்பு அந்த மங்களம் கிராமத்தில் தொடங்கி மாந்தை கிராமம் வரை 64/0 to 75.1 கி.மீ தூரம் உள்ளது.

8. மேற்படி பகுதியில் உள்ள வெள்ளக்கரை, ஆற்றுகரை ஆகிய பகுதிகளில் உள்ள மரங்கள், கட்டுமானங்கள், ஆக்கிரமிப்புகள் ஆகியவை சம்மந்தமாக அவ்வப்போது

பார்வையிட வேண்டியது எனது பொறுப்பு என்றால் சரியல்ல. வெள்ளக்கரையில் உள்ள நீர்பாசன கட்டமைப்புகளை பராமரிப்பது தான் எங்கள் வேலை. அதற்கான வேலைகளை செய்வோம். ஆக்கிரமிப்புகள் சம்மந்தமாக நாங்கள் நடவடிக்கை எடுப்பதில்லை என்றால் ஆக்கிரமிப்பு சம்மந்தமாக மனு பெறப்பட்டால் நிலஅளவீடு செய்து ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு அறிவிப்பு கொடுப்போம். நில அளவை செய்வதற்கு எங்கள் துறையில் தனியாக நில அளவையர்கள் உள்ளார்களா என்றால் இல்லை.

9. சா.சா.ஆ.1 உத்தரவை அனுசரித்து நான் நில அளவை செய்தேனா என்றால் சா.சா.ஆ.1 உத்தரவு திருவிடைமருதூர் வட்டாட்சியர், எஸ்புதூர் உதவி பொறியாளர், ஆடுதுறை சரக வருவாய் ஆய்வாளர், எஸ்புதூர் கிராம நிர்வாக அலுவலகர் மற்றும் கிராம உதவியாளர் ஆகியோரால் தான் கூட்டாக நில ஆய்வு செய்யப்பட்டுள்ளது. எந்த புல எண்ணை அவ்வாறு கூட்டாய்வு செய்யப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.193 மற்றும் 218/9 ல் உள்ள தென்னை மரங்களை கூட்டாய்வு செய்துள்ளார்கள்.

10. சர்வே எண்.193 ல் சுமார் 2 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள சொத்து என்றால் சரிதான். அதிலுள்ள தென்னை மரங்களை தான் ஆய்வு செய்துள்ளார்கள். 193 ல் எந்த இடத்தில் உள்ள தென்னை மரங்களை ஆய்வு செய்துள்ளார் என்றால் சம்மந்தப்பட்ட இடத்தில் உள்ள தென்னை மரங்களை ஆய்வு செய்துள்ளார்கள். கோவிந்தராஜ் என்பவர் கொடுத்த மனுவின் பேரில் தென்னை மரங்களை ஆய்வு செய்துள்ளார்கள். கோவிந்தராஜ் குடியிருக்கும் இடம் பட்டா இடமா,பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடமா என்பதற்கு ஆவணங்கள் எதுவும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. அதனால் சர்வே எண்.218/9 ல் கோவிந்தராஜ் குடியிருந்து வருகிறார் என்பது தெரியாது என்றால் சரிதான்.

11. சா.சா.ஆ.3 ஆவணத்தில் வட்டாட்சியர் கையெழுத்து இல்லை என்றால் கையெழுத்து செய்துள்ளார். ஆனால் கையெழுத்து தெரியவில்லை. அசல் உத்தரவை

பார்த்தால் தான் சா.சா.ஆ.3 உத்தரவு உண்மையானதா என்று தெரியவரும் என்றால் சரியல்ல. கோவிந்தராஜ் குடியிருந்து வரும் சொத்தும் வெள்ளக்கரைக்கு சொந்தமான புறம்போக்கு சொத்து என்றால் நிள அளவை செய்தால் தான் தெரியவரும். கோவிந்தராஜ் சொத்திற்கு எந்த புறத்தில் தென்னை மரங்கள் இருந்தது என்றால் ஆவணங்கள் அடிப்படையில் கோவிந்தராஜ் வீட்டிற்கு மேல்புறம் தென்னை மரம் சாய்ந்த நிலையில் இருந்துள்ளது. தென்னை மரம் சாய்ந்த நிலையில் இருந்தது என்பதை காட்டுவதற்கு புகைப்படம் எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை. சார்ஆட்சியரின் அறிக்கையில் உள்ளது. சார் ஆட்சியர் நேரடியாக ஸ்தல ஆய்வு செய்தாரா என்றால் செய்துள்ளார்.

12. நான் தாக்கல் செய்துள்ள அறிக்கை சார்ஆட்சியரால் நேரடியாக ஆய்வு செய்யப்பட்ட அறிக்கை என்றால் சரிதான். கோவிந்தராஜ் வீட்டிற்கும் தென்னை மரம் உள்ள இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் தூரம் சம்மந்தமாக அறிக்கையில் எதுவும் இல்லை. எஸ்புதூரில் உள்ள கோனேரிராஜபுரம் பாலத்திலிருந்து கிழக்கே கடைகள், குடியிருப்புகள், அரசு அலுவலகங்கள் உள்ளது  என்றால் சரிதான். இந்த அமைப்புகள் அனைத்தும் வெள்ளக்கரையில் ஆக்கிரமிப்பாக உள்ளது என்றால் நிள அளவை செய்தால் தான் தெரியவரும்.

13. கோவிந்தராஜ் எந்த தேதியில் மனு கொடுத்துள்ளார் என்றால் 11/12/2015 ம் தேதி கொடுத்ததாக  சார்ஆட்சியர் அலவலக குறிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 28/11/2015 ம் தேதிக்கு பிறகு தான் அந்த மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2015 ம் ஆண்டில் இருந்து இந்த வழக்கு நடந்து வருவது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக இருவருக்கும் விரோதம் ஏற்பட்டு நல்ல காய்ப்பு நிலையில் இருந்த மரங்களை வெட்ட வேண்டும் என்பதற்காக கோவிந்தராஜ் பொய்யாக சார்ஆட்சியரிடம் மனு கொடுத்து அதன் அடிப்படையில் அறிக்கை தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

14. வெட்டப்பட்ட மரம் காய்ப்பு மரமா என்றால் காய்ப்பு மரமா என்று அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. சா.சா.ஆ.7 ஆவணத்தில் பட்டுப்போய் கீழே விழுந்த மரத்திற்கு பணம் கட்டப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வெட்டப்பட்ட மரம் காய்ப்பு மரமா அல்லது பட்டுப்போய் கீழே விழுந்த மரமா என்றால் காய்ப்பு மரமா அல்லது பட்டுப்போன மரமா என்று அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. எங்கள் துறையில் ராமசாமிக்கு ஆதரவாக செயல்பட்டு செய்யக்கூடாத காரியத்தை செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

15. சா.சா.ஆ.3 ஆவணத்தில் வட்டாட்சியர் ஸ்தல ஆய்வு சர்வே எண்.193 ல் கண்ட இடத்தை மட்டுமே புல தணிக்கை செய்ததாகவும், சார்ஆட்சியர் உத்தரவில் சர்வே எண்.193/2 ல் கண்ட புல தணிக்கை செய்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் வட்டாட்சியரின் ஸ்தல ஆய்வு அடிப்படையில் சார் ஆட்சியரின் உத்தரவு இல்லை என்றால் சரியல்ல. வட்டாட்சியர் அந்த இடத்தை பார்வையிடவில்லை என்றால் சரியல்ல. ராமசாமி வகையறாவின் செல்வாக்கை பயன்படுத்தி அரசு அதிகாரிகளை தவறாக பயன்படுத்தி உத்தரவு பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ராமசாமி வகையறாவிற்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் நல்ல காய்ப்பு தன்மையில் இருந்த தென்னை மரத்தை சட்டத்திற்கு புறம்பாக நாங்கள் வெட்டியுள்ளோம் என்றால் சரியல்ல.

16. மரம் வெட்டுவதற்கு முன்பு மரம் யாருடைய பாதுகாப்பில் இருந்தது என்று நான் பார்வையிட்டேனா என்றால் அப்போது பணியில் இருந்த உதவி பொறியாளர் கூட்டாய்வு செய்ய சென்றுள்ளார். தாவா சொத்தில் இருந்த தென்னை மரம் சாய்ந்து இருந்ததா நேராக இருந்ததா என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனக்கு கீழே பாசன உதவியாளர் உள்ளார் என்றால் சரிதான். எனக்கு உதவியாக அவர்

சில விவரங்களை சொல்வார் என்றால் சரிதான். அவர் தென்னை மரங்களை வெட்டப்போவதாக வாய்மொழியாக பிரதிவாதியிடம் சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன் பிறகு பிரதிவாதி எனக்கு மற்றும் எனது உயர்அதிகாரிகளிடம் ஆட்சேபணை கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

17. வெட்டப்பட்ட தென்னை மரம் இருந்த இடத்திற்கும், கோவிந்தராஜ் வீட்டிற்கும் 100 மீ இடைவெளி இருந்தது என்றாலும், அதனால் கோவிந்தராஜ் வீட்டிற்கு எவ்வித இடைஞ்சலும் இல்லை என்றாலும் சரியல்ல. கோவிந்தராஜிடம் உரிய சன்மானம் பெற்றுக்கொண்டு நல்ல காய்ப்பு நிலையில் இருந்த தென்னை மரத்தை வெட்டி இழப்பு ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. வட்டாட்சியர் மற்றும் சார்ஆட்சியரின் அறிக்கையில் தாவா சொத்தில் உள்ள மரம் சம்மந்தமான இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.